©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 44] CHENNAI, WEDNESDAY, NOVEMBER 4, 2026
Aippasi 18, Parabhava, Thiruvalluvar Aandu–2057

Part II—Section 2

Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

CONTENTS

Pages.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

Labour Courts for Adjudication. 564-565

LAW DEPARTMENT

Tamil Nadu Dr. Ambedkar Law University Act.—
Nomination of members of Syndicate of The Tamil Nadu Dr. Ambedkar Law University, Chennai for Certain Period 565

D.T.P.—II-2 (44)—1

NOTIFICATIONS BY GOVERNMENT

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல்

[அரசாணை (டி) எண் 489, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(பி1)த் துறை, 31 ஆகஸ்ட் 2026, ஆவணி 14, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]

No.II(2)/LWSD/859/2026.—தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம் (CITU), திண்டுக்கல் என்ற தொழில் சங்கத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்குமிடையே தொழில் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழில் தகராறை பின்வரும் எழுவினாவுடன், திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்புரையாக வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழில் தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

மனுதாரர் திரு.K.நாகராஜ். ஓட்டுநர் (பணி எண். 55717) என்பவருக்கு நிர்வாகத்தின் அலுவலக உத்தரவு எண். LD8D2/0605, நாள். 20.01.2017–ன்படி வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களுடன் மூன்று வருட காலத்திற்கு நிறுத்தம் செய்தும், தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த 04.06.2016 முதல் 03.07.2016 வரையிலான 30 நாட்களை அவரது தகுதிக்குட்பட்ட விடுப்பாகக் கருதியும் நிர்வாகம் வழங்கிய தண்டனை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

V.T. மில்ஸ் லிமிடெட், விருதுநகர்

[அரசாணை (டி) எண் 548, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(பி1)த் துறை, 1 அக்டோபர் 2026, புரட்டாசி 14, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]

No.II(2)/LWSD/860/2026.—V.T. மில்ஸ் லிமிடெட் விருதுநகர் என்ற நிர்வாகத்திற்கும், திரு.S.முருகப்பன், உதவி போர்மென் என்ற தொழிலாளர் சார்ந்த விருதுநகர் மாவட்ட பஞ்சாலை தொழிலாளர் சங்கத்திற்குமிடையே தொழில் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழில் தகராறை பின்வரும் எழுவினாவுடன், மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்புரையாக வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழில் தகராறை மதுரை. தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

விருதுநகர் மாவட்டம், சூலக்கரையில் அமைந்துள்ள V.T. மில்ஸ் லிமிடெட், என்ற நிர்வாகம் உதவி போர்மேனாக பணிபுரியும் திரு.S.முருகப்பன் என்பவருக்கு ஏப்ரல் 2020 முதல் ஆகஸ்ட் 2020 வரை பணி வழங்காத காலத்திற்குரிய 5 மாத ஊதியமும், 2021 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்கு ஊதிய உயர்வும் வழங்க வேண்டுமென்ற விருதுநகர் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மதுரா கோட்ஸ் பிரைவேட் லிமிடெட், தூத்துக்குடி

[அரசாணை (டி) எண் 550, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(பி1)த் துறை, 6 அக்டோபர் 2026, புரட்டாசி 19, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]

No.II(2)/LWSD/861/2026.—நெல்லை, சிதம்பரனார் மாவட்ட தேசிய பஞ்சாலை தொழிலாளர் சங்கம், தூத்துக்குடி என்ற தொழில் சங்கத்திற்கும், மதுரா கோட்ஸ் பிரைவேட் லிமிடெட். தூத்துக்குடி என்ற நிர்வாகத்திற்குமிடையே தொழில் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும், இத்தொழில் தகராறை பின்வரும் எழுவினாவுடன், திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்புரையாக வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழில் தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

எழுவினா

தூத்துக்குடி மதுரா கோட்ஸ் ஆலையிலுள்ள இயந்திரங்களைக் கழட்டி மதுரை. அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் ஆலைகளுக்கு கொண்டு செல்வதைத் தவிர்த்து நிர்வாகம் தூத்துக்குடி ஆலையை முழுமையாக இயக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு. திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் லிட்), தருமபுரி

திருத்த அறிவிக்கை

[அரசாணை (டி) எண் 517, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(டி1)த் துறை, 18 செப்டம்பர் 2026, புரட்டாசி 1, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057.]

No.II(2)/LWSD/862/2026.—***தமிழ்நாடு அரசிதழ்*** வெளியீடு எண்.9A (Supplement) நாள் 04.03.2026, பாகம் II—பிரிவு 2–ல் பக்க எண். 8–9–ல் அறிவிக்கை எண்.II(2)/LWSD/131/2026 அரசாணை (டி) எண்.17, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, நாள். 20.01.2026 கீழ்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

அரசாணை (டி) எண்.17, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (டி1)த் துறை, நாள். 20.01.2026–இல் காணப்படும் தொழிற்சங்கத்தின் கோரிக்கையினை தீர்வுக்கு குறிப்பிட்டு அனுப்பப்படும் தொழிலாளர் நீதிமன்றத்தின் பெயரை

1. அறிவிக்கையில் காணப்படும் "தொழிலாளர் நீதிமன்றம் ஒசூர்" என்பதற்குப் பதிலாக

"தொழிலாளர் நீதிமன்றம், சேலம்"

என்று திருத்தி வாசிக்கவும்.

கொ.வீர ராகவ ராவ்,
அரசுச் செயலாளர்.

LAW DEPARTMENT

Nomination of members of Syndicate of The Tamil Nadu Dr. Ambedkar Law University, Chennai for Certain Period under the Tamil Nadu Dr. Ambedkar Law University Act.

[G.O. Ms. No. 330, Law (LS), 15th October 2026, Purattasi 28, Parabhava, Thiruvalluvar Aandu–2057.]

No II(2)/LAW/863/2026.—Under item (e) of 'Class II - Other Members, of sub-section (2) of section 22 of the Tamil Nadu Dr. Ambedkar Law University Act, 1996 (Tamil Nadu Act 43 of 1997), the Governor of Tamil Nadu hereby nominates Dr. R. Rajyavardhanan, Assistant Professor, Government Law College, Tiruchirappalli, as a member of the Syndicate of the Tamil Nadu Dr.Ambedkar Law University, Chennai, for a period of three years from the date of this order.

NOTIFICATION-II

[G.O. Ms. No. 330, Law (LS), 15th October 2026, Purattasi 28, Parabhava, Thiruvalluvar Aandu–2057.]

No II(2)/LAW/864/2026.—Under item (f) of 'Class II - Other Members, of sub-section (2) of section 22 of the Tamil Nadu Dr. Ambedkar Law University Act, 1996 (Tamil Nadu Act 43 of 1997), the Governor of Tamil Nadu hereby nominates Dr.N. Vijayaraj, Advocate, No.80/25, 1st Avenue, Ashok Nagar, Chennai 600 083, as a member of the Syndicate of Tamil Nadu Dr.Ambedkar Law University, Chennai, for a period of three years from the date of this order.

P. SUMATHI,
Secretary to Government.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU